(கல்யாண சீர் விபரம்)

1. (முகூர்த்தக்கால் வெட்டுதல்)

ஒரு தட்டத்தில் தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு
நிறைநாழி நூலுடன் தார்க்கருது. டம்ளரில் பால்.
நெய்க்கிண்ணம். மஞ்சள்துணியில் நவதானியம்
முடிந்து வைத்து. ஒரு சொம்பில் தண்ணீர்
இதுபோல் மறுபடி ஒரு தட்டத்தில் மேலே
குறிப்பிட்ட் சாமானங்கள் எடுத்து வைத்து.
பண்டாரம் இரண்டு பேர் வந்து இரண்டு
தட்டங்களையும் எடுத்துக் கொள்வார் சொ
ம்புத்தண்ணீரும் எடுத்துக் கொள்வார்.
ஆண் அருமைக்காரரும் உறவினர்கள்
உள்பட மேளவாத்தியத்துடனும் வண்ணான்
பந்தம் பிடிக்க எல்லோரும் பால் பாச்சான்
மரம் இருக்கும் இடத்திற்கு செல்வார்கள் நா
விதன் முன் சென்று இரண்டு பாச்சான் கோல்
நேர்கோலாக பார்த்து வைத்திருப்பான். பாச்சான்
கோல் இருக்கும் இடத்தில் வண்ணான் வெள்
ளைமாத்து விரிப்பான். பண்டாரம் சாமானத்தட்
டங்களை அதன் மேல் வைத்து சொம்புத்தண்
ணீரை அருமைக்காரரிடம் கொடுப்பார்
அருமைக்காரர் அதை வாங்கி முதலில் முகூ
ர்த்தக்காலுக்கு தண்ணீர் விடுவார் பிறகு பால்
விட்டு மறுபடியும் தண்ணீர் விட்டு பிறகு பண்
டாரம் தேங்காயை உடைத்து வைப்பார்
அருமைக்காரர் நெருப்பில் நெய் போட்டு

70

தண்ணீர் சுற்றி நீர் விளாவி தூபம் காட்டி பூஜை செய்து முகூர்த்தக்காலை வெட்டுவார் இரண்டாவது முகூர்த்தக்காலையும் இதேமாதிரி பூஜை செய்து வெட்டி மேளவாத்தியத்துடன் வீட்டுக்கு கொண்டு வருவார்கள். முகூர்த்தக்கால் மேல் தலையில் மூன்று கிளையுள்ளதாக இருக்க வேண்டும்.

௨. முகூர்த்தக்கால் போடுதல்,

கல்யாணப்பந்தலில் ஜலமூலையில் உள்ள பந்தக்காலின் அருகில் முக்காலி வைத்து அதன்மேல் வெள்ளைமாத்து விரித்து ஒரு தட்டத்தில் தேங்காய் பழம் வெற்றிலைபாக்கு நிறைநாழி டம்ளரில் பால் நெய்க்கிண்ணம் நவதானிய முடிப்பு இவைகள் எல்லாம் வைத்து பண்டாரம் முக்காலி மேல் கொண்டுவந்து வைப்பார். பிறகு ஆண் அருமைக்காரர். மாப்பிள்ளை வீட்டார் இருவர் பெண் வீட்டார் இருவர் மூன்று பேரும் முகூர்த்தக்காலை பிடித்து. அருமைக்காரர் முதலில் முகூர்த்தக்காலுக்கு தண்ணீர் விட்டு இரண்டாவது பால்விட்டு மறுபடியும் தண்ணீர் விட்டு. பிறகு அருமைக்காரர் நெருப்பில் நெய் போட்டு நவதானிய முடிப்பை எடுத்து தூபம் காட்டி முகூர்த்தக்காலில் கட்டுவார். பந்தக்காலின் அருகில் பூமியில்

முதலில் தண்ணீர் விட்டு இரண்டாவது பால் விட்டு
மறுபடியும் தண்ணீர் விட்டு. பிறகு ஒரு வெற்றில
பாக்கு எடுத்து அந்த இடத்தில் வைத்து மூன்
று பேரும் முகூர்த்தக்கால எடுத்து வெற்றில வை
த்த இடத்தில் வைத்து பந்தக்காலுடன் சேர்த்
து பனைநாரில் மூன்று கட்டுப் போடுவார்கள்
பிறகு பண்டாரம் தேங்காய் உடைத்து வை
ப்பார் அருமைக்காரர் முகூர்த்தக்காலுக்கு
தண்ணீர் சுற்றிப்போட்டு நெருப்பில் நெய்
போட்டு பூஜை செய்வார். பிறகு நிறைநாழி
யுடன் தேங்காய் பழத்தட்டத்தை எடுத்து
முகூர்த்தக்காலுக்கு இடது வலது மூன்
று முறை சுற்றுவார். பிறகு தேங்காய் பழம்
நிறைநாழி நெல் இவைகளை பண்டாரம்
எடுத்து நாவிதனுக்கு கொடுப்பார் இது
பெண் வீட்டு நாவிதனுக்கு சேர்ந்தது.
பிறகு மாப்பிள்ளைக்கு இணைச்சீர் நடக்கும்
இடத்தில் மேற்கண்டவாறு பூஜை செய்து
மற்றொரு முகூர்த்தகால நாட்டுவார்கள்
இங்கு பூஜை செய்த தேங்காய் பழம்
மாப்பிள்ளை வீட்டு நாவிதனுக்கு சேர்ந்தது

3. சீர்தண்ணிக்கு போகுதல்

எளிதிங்கள் செய்து கொண்ட பெண்கள்
மாப்பிள்ளை வீட்டுக்கு மூன்று பேர் பெண்
வீட்டுக்கு மூன்று பேர். ஆக ஆறு பேர்

பெண்கள் கால் முகம் சுத்தம் செய்து நெற்றியில் விபூதி பூசி. அருமைக்காரரை கும்பிட்டு வெற்றிலை வாங்கி போட்டுக்கொண்டு. வண்ணான் ஆறு பேருக்கும் சிம்மாடு கொடுப்பான். பிறகு ஆறு பெண்களும் 6 சொம்பு எடுத்துக்கொண்டு மேள வாத்தியம் தீவட்டியுடன் கிணற்றுக்கு செல்வார்கள் பண்டாரம் ஆறு சொம்பிலும் தண்ணீர் எடுத்துக் கொடுப்பார். மேள வாத்தியத்துடன் வீட்டுக்கு வந்து மாப்பிள்ளை இருக்கும் வீட்டில் ஒரு பாத்திரத்தில் மூன்று சொம்பு தண்ணீரும் பெண் வீட்டில் மூன்று சொம்பு தண்ணீரும் ஊற்றி வைப்பார்கள்,

4. மூகவேளைக்கு பால் பூஜித்தல்

மாப்பிள்ளைக்கு சொம்பில் தண்ணீர் கொடுத்து கால் முகம் சுத்தம் செய்து. மணவறை வாசலில் முக்காலி போட்டு அதன் மேல் வெள்ளை மாத்து விரித்து. மாப்பிள்ளையை முக்காலி மேல் உட்கார வைத்து. மைத்துனரை இடது பக்கம் துணைக்கு உட்கார வைத்து பிறகு ஒரு தட்டத்தில் வெற்றிலை பாக்கு டம்ளரில் பால் சொம்பில் தண்ணீர் கொண்டு வந்து வைத்து. அருமைக்காரர் தட்டத்துடன் எடுத்து. கிழக்கு முகமாக நின்று சூரியனை கும்பிட்டு பிறகு மேற்கு முகமாக திரும்பி டம்ளர் பாலை எடுத்து மாப்பிள்ளைக்கு கொடுப்பார் மாப்பிள்ளை பால் சாப்பிட்டு விட்டு வாய் கொப்பளித்து விட்டு

வருவார். அருமைக்காரர் வெற்றிலை பாக்கு எடுத்து மாப்பிள்ளைக்கு கொடுப்பார். மாப்பிள்ளை அதை கும்பிட்டு வாங்குவார். பிறகு மாப்பிள்ளை. மைத்துனர். நாவிதன். மூன்று பேரும் முகவேலை (சேவிங்) செய்ய மறைவான இடத்துக்கு செல்வார்கள்.

பிறகு உறவினர்கள் நண்பர்கள் எல்லோருக்கும் விருந்துபசாரம் செய்து வண்ணான் நாவிதன் எல்லோருக்கும் சாப்பாடு போடுவார்கள். சிறிது நேரம் சென்றபின்.

5. (வெற்றிலை கட்டுதல்)

மாப்பிள்ளை இருக்கும் வீட்டில் மாத்து விரித்து முக்காலிபோட்டு அதன் மேல் வெள்ளைமாத்து விரிப்பார்கள். பிறகு மாப்பிள்ளை வீட்டாரும் உறவினர்கள். அருமைக்காரர் எல்லோரும் மாத்தில் உட்கார்ந்து முக்காலிமேல் பெரிய தட்டம் ஒன்று வைத்து தட்டத்தில் வெற்றிலை ஐந்து அடுக்கு பாக்கு ஒருபடி தேங்காய் மூன்று பழம் மூன்று சீப்பு எலுமிச்சம்பழம். கண்ணாடி சீப்பு.சேவு ஜாக்கெட் பாடி. விளிமங்கள். பூ. சிறிய வெல்லம் சந்தனம்.திகப்பு. எல்லாம் வைத்து வெள்ளைமாத்தில் அப்படியே மூட்டையாக கட்டி வெற்றிலை மூட்டையை பண்டாரம் எடுத்துக் கொள்வார். மேளவாத்தியம் கிவட்டியுடன்

உறவினர்கள் எல்லோரும் புறப்பட்டு பிள்ளையார்
கோவிலுக்கு சென்று வெற்றிலை தட்டையை பிள்
ளையார் முன் வைத்து எல்லோரும் கும்பிட்டு
பிறகு வெற்றிலை தட்டையை எடுத்துக்கொண்டு
வீட்டுக்கு வருவார்கள். பெண் இருக்கும் வீட்டு
க்குள் மாத்து விரித்து முக்காலி போட்டு சாணி
யால் பிள்ளையார் பிடித்து வைத்து அருகம்புல்
பிள்ளையார் சிரசில் குத்தி முக்காலியின் முன்
கிழக்கு முகமாக வைத்து தேங்காய் பழம்
உடைத்து வைத்து சொம்பில் தண்ணீர் நெய்
கிண்ணம் எல்லாம் வைத்து. வெற்றிலை தட்டை
யை முக்காலி மேல் வைத்து. அருமைக்காரர்.
நெருப்பில் நெய் போட்டு தூபம் காட்டி தண்ணீர்
சுற்றிப் போட்டு பூஜை செய்வார். பிறகு வெற்றிலை
தட்டையை அவிழ்த்து பெருதட்டத்தில்
சீலை ஜாக்கெட் பாடி இவைகளை எடுத்து வைத்
து பூவையும் எடுத்து வைத்து மணப்பெண்ணின்
துணைப் பெண்ணின் கையில் கொடுப்பார். மணப்பெண்ணு
க்கு புதுசீலையை கட்டி அலங்காரம் செய்து
சபைக்கு கூட்டி வந்து. அருமைக்காரர்
தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு எலுமிச்சம்
பழம் சந்தனம் இவைகளை பெருதட்டத்தில்
வைத்து பெண்ணின் மடியில் எடுத்து வைப்
பார். மணப்பெண் தேங்காய் பழங்களை மடியில்
கட்டிக்கொண்டு அருமைக்காரரை நமஸ்க
காரம் செய்து விட்டு சென்று விடுவார்கள்

பிறகு ஒரு டம்ளரில் பால் ஒரு தட்டத்தில் சர்க்கரை கொண்டுவந்து. பால் அருமைக்காரர் சாப்பிடுவார். சர்க்கரை பந்துக்கள் அனைவருக்கும் வழங்குவார்கள். பிறகு எல்லோரும் வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்டு கல்யாண நாள் வருஷம். மாதம் தேதி சபையறிய அருமைக்காரர் சொல்லுவார். இதற்கு பெயர் நாள்குறித்தல் என்று சொல்வார்கள்.

6. முகம்துடைத்தல்)

மணவரை வாசலில் மூக்காலிபோட்டு வெள்ளை மாத்து விரித்து. மாப்பிள்ளையின் மைத்துனர் மாப்பிள்ளையைக் கூட்டிவந்து மூக்காலிமேல் உட்காரச்செய்வார். பிறகு மாப்பிள்ளையின் முன் ஒரு மூக்காலிபோட்டு வெள்ளை மாத்து விரித்து பெரிய தட்டத்தில் அரிசி 4 வள்ளம் போட்டு மூக்காலிமேல் வைப்பார்கள். அரிசியின் மேல் வெற்றிலை பாக்கு வைத்து அதன் மேல் பெரிய அச்சுவெல்லம் வைத்து விட்டு. மூக்காலியின் முன் பிள்ளையார் பிடித்து வைத்து அதன் முன் தேங்காய் பழம் உடைத்து வைத்து நிறைநாழி நெய்க்கிண்ணம் ஒரு கிண்ணத்தில் பால் ஊற்றி அந்த பாலில் வெள்ளிப்பணம் 4 அணா போடுவார்கள். பிறகு அருமைக்காரர் மாப்பிள்ளையின் இரண்டு கையையும் பிடித்து.

அரிசியில் கைகோர்வை யிடுவார் பிறகு நெருப்பில் நெய்
போட்டு தண்ணீர் சிற்றிப்போட்டு பூஜை செய்வார்.
பிறகு கிண்ணத்தில் இருக்கும் பாலை நாவிதன்
கிண்ணத்தில் ஊற்றுவார். நாவிதன் பாலைத் தொட்
டு மாப்பிள்ளையின் நெற்றியில் துடைத்து வலதுகை
மணிக்கட்டிலும் இடது கை மணிக்கட்டிலும்
கால் பாதம் இரண்டுக்கும் துடைத்து. கத்தியை
எடுத்து பால் துடைத்த பக்கம் சேவிங் செய்
வான். பிறகு அருமைக்காரர் நிறைநாழியை
எடுத்து மாப்பிள்ளையின் சிரசிற்கு இடதுவல
து மூன்று முறை சுற்றுவார். பிறகு கைகோர்வை
யை எடுத்துவிடுவார். தேங்காய் பழம்
நிறைநாழி நெல் மாப்பிள்ளை வீட்டு நாவிதனுக்
கு கொடுப்பார்கள்.

7. மாப்பிள்ளைக்கு தண்ணீர் வார்த்தல்

வாசலில் ஒருபாத்திரத்தில் பண்டாரம் தண்ணீர்
கொண்டு வந்து வைப்பார். நாவிதன் முக்காலி
போட்டு துணைமாப்பிள்ளையிடம் சொல்லி மாப்
பிள்ளையை கூட்டி வந்து முக்காலிமேல் உட்
கார வைப்பார்கள். பெண் அருமைக்காரர் ஒரு
தட்டத்தில் சாதம் சுண்ணாம்பு மஞ்சத்தூள் கலந்
து செஞ்சாதம் செய்வார். வெள்ளைச் சாதம் தனியா
க வைத்து கொண்டு வருவார். பெண் அருமைக்
காரர் முதலில் மாப்பிள்ளையின் சிரசில் நெய்

நெய் துடைத்து பிறகு அரப்புத்தேய்த்து மூன்று சொம்பு தண்ணீர் ஊற்றுவார்கள், பிறகு செஞ்சாதம் தட்டத்தில் வைத்து நெருப்பில் நெய்போட்டு தூபம் காட்டி சாதத்தை மாப்பிள்ளையின் சிரசை நோக்கி சுற்றி மாப்பிள்ளையின் வலது பக்கம் பின்பக்கம் இடது பக்கம் மூன்று பக்கமும் சாதத்தை கீழே போட்டு விட்டு பிறகு தட்டத்தில் தண்ணீர் ஊற்றி இடது வலது மூன்று முறை சுற்றிப் போட்டு மூன்று சொம்பு தண்ணீர் சிரசில் ஊற்றுவார்கள், பிறகு வெள்ளைச் சாதம் தட்டத்தில் வைத்து நெருப்பில் நெய் போட்டு தூபம் காட்டி சாதத்தை கீழே போட்டு விட்டு தட்டத்தில் முன்போல் தண்ணீர் ஊற்றி சுத்திப்போட்டு பிறகு அக்கை புளியமரத்தின் சிறுகுச்சி இரண்டு முள நீளம் இருக்கும். அக்கையை அருமைக்காரர். நாவிதன். மற்றும் ஒரு பெண் ஆக மூன்று பேரும் கையில் பிடித்து. மூன்று முறை மாப்பிள்ளையின் சிரசில் ஓங்கி பிறகு அக்கையை கால் பெருவிரலில் மாப்பிள்ளை மிதித்து முக்காலி மேல் உட்காருவார். பிறகு பெண் அருமைக்காரர் சர்க்கரை மூன்று உருண்டை பிடித்து ஒவ்வொரு உருண்டையாக மாப்பிள்ளையின் சிரசை சுற்றி நாவிதன் கையில் கொடுப்பார்கள். பிறகு மாப்பிள்ளைக்கு நிறையதண்ணீர் விட்டு குளித்து மாப்பிள்ளை இருப்பிடம் சென்று விடுவார்

8. பெண்ணுக்கு தண்ணீர் வாத்தல்,

வாசலில் முக்காலி போட்டு பெண்ணைக் கூட்டி வந்து முக்காலிமேல் உட்கார வைத்து. பெண் அருமைக்காரர் பெண்ணின் தலையில் நெய் தேய்த்து பிறகு அரப்பு தேய்த்து. மூன்று சொம்பு தண்ணீர் ஊற்றுவார்கள். பிறகு தட்டத்தில் செஞ்சாதம் போட்டு நெருப்பில் நெய் போட்டு தூபம் காட்டி சாதத்தை மூன்று முறை சுற்றி கீழே போட்டு விட்டு தட்டத்தில் தண்ணீர் ஊற்றி மூன்று முறை சுற்றிப் போடுவார்கள் பிறகு மூன்று சொம்பு தண்ணீர் தலையில் ஊற்றுவார்கள் பிறகு வெள்ளைச் சாதம் தட்டத்தில் வைத்து நெருப்பில் நெய்போட்டு தூபம் காட்டி சாதத்தை கீழே போட்டு விட்டு தட்டத்தில் தண்ணீர் ஊற்றி மூன்று முறை சுற்றிப்போட்டு மூன்று சொம்பு தண்ணீர் ஊற்றுவார்கள். பிறகு பெண்ணின் முகத்துக்கு மஞ்சள் பூசி நன்றாக குளித்த பின் கூட்டிப்போய் வேறு சேலை கட்டி. பெண் அருமைக்காரர் பெண் மாப்பிள்ளை இருவருக்கும் சாதம் போடுவார்கள்.

9, மாலை கரகம் வாங்குதல்

மணவறை வாசலில் மாத்து விரித்து அருமைக்
காரரும் உறவினர்களும் மாத்தில் உட்கார்ந்து
அருமைக்காரர் முன் முக்காலி போட்டு அதன்மேல்
பெரிய தட்டம் வைத்து. ஐயர். மாப்பிள்ளை வீட்டுப்
பண்டாரம் பெண் வீட்டு பண்டாரம். அந்த கிராம
த்தில் இருக்கும் சுவாமி பெயரைச் சொல்லி.
பூமாலை தட்டத்தில் வைப்பார்கள். மாப்பிள்ளைக்
கு இரண்டு ஜோடி பெண்ணுக்கு இரண்டு ஜோடி
இணை பெண்ணுக்கு இரண்டு ஜோடி ஆக ஆறு
ஜோடி மாலை இருக்கும். பிறகு அருமைக்கார
ர் எழுந்து நெருப்பில் நெய் போட்டு தண்ணீர்
சுற்றிப்போட்டு பூஜை செய்வார் பிறகு மாலையை
எடுத்து பெண் அருமைக்காரரிடம் கொடுப்
பார் பெண் அருமைக்காரர் மாலையை சீர்த்தண்
ணீர் ஊற்றி வைத்த பாத்திரத்தின் மேல் வைப்பார்
பிறகு மண்ணுடையார் கரகப்பானை கொண்டு வருவார்
அதை சபை முன் வாசலில் வைத்து ஒரு தட்டத்தில்
சாதம் போட்டு அதில் சர்க்கரை பழம் வைத்து
தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு கரகப்பானை
முன் வைத்து. உடையார் நெருப்பில் நெய் போட்
டு தண்ணீர் சுற்றிப் போட்டு பூஜை செய்து. பிறகு
மாப்பிள்ளை வீட்டுக்கு 5 கரகப்பானையும் பெண் வீட்
டுக்கு 5 கரகப்பானையும் உடையார் எடுக்

பெண் அருமைக்காரிடம் கொடுப்பார் அதை
வாங்கிக் கொண்டு போய் வைப்பார்கள்.
மாலை வைத்தவர்களுக்கு கொடுக்கும் மொறை.
ஐயருக்கு 10 படி அரிசி. பருப்பு ¼ படி. சிறிய வெல்லம்
மாப்பிள்ளை வீட்டு பண்டாரத்திற்கு 10 படி அரிசி.
பருப்பு ¼ படி சிறிய வெல்லம் 10 அச்சு.
பெண் வீட்டு பண்டாரத்திற்கு 10 படி அரிசி-
பருப்பு ¼ படி சிறிய வெல்லம் 10 அச்சு.
வெற்றிலை பாக்கு கொடுப்பார்கள்.
மண்ணுடையாருக்கு 9 படி அரிசி பருப்பு ¼ படி
சிறிய வெல்லம் 10. வெற்றிலை பாக்கு கொடுத்து
அனுப்பி விடுவார்கள்,

10, குப்பாரி கொட்டுதல்,

நாவிதன் பெண் அருமைக்காரிடம் பேழை
மூடியை கொடுத்து. அதில் நிறை நாழி தேங்
காய் பழம் வெற்றிலை பாக்கு மஞ்சத்தூள்
எல்லாம் பேழை மூடியில் வைத்து. சொம்பில்
தண்ணீர் கொண்டு மணவறை வாசலில் உட்
கார்ந்து தார்கதில் இருக்கும் நூலை எடுத்து
நாவிதனும் பெண் அருமைக்காரரும் நூலை
ஒரு முளநீளத்தில் ஏடு நூல் பிடித்து சிறிய
கயிறு போல் முறுக்கி. மஞ்சள் பொடி கலந்து
மஞ்சநூல் செய்து விரலி மஞ்சள்
அதில் கட்டி பேழை மூடியில் வைத்து.

பெண் அருமைக்காரர் பேழைமூடியை எடுத்து இடுப்பில் வைத்து வலது கையில் சொம்புத்தண்ணீரை எடுத்து மேளவாத்தியம் தீவட்டியுடன் வீதிக்கு வந்து நடுவீதியில் மாத்துவிரித்து பேழைமூடியை மாத்தில் வைத்து குழவிக்கல்லை எடுத்து அதற்கு நெய்துடைத்து தண்ணீர் விட்டு சுத்தம் செய்து ஒருவெற்றிலையை அதில் வைத்து நூலில் கட்டி பேழைமூடிக்கு முன் கிழக்கு முகமாக வைத்து தேங்காய் உடைத்து வெற்றிலை பாக்கு பழம் வைத்து பெண் அருமைக்காரர் நெருப்பில் நெய் போட்டு பூஜை செய்து விட்டு விரளிமஞ்சள் கட்டி வைத்த நூலை எடுத்து கிழக்குமுகமாக நின்று சூரியனை கும்பிட்டு பிறகு குழவிக்கல்லுக்கு மூன்று முறை ஓங்கி கங்கணத்தை பேழைமூடிக்குள் வைத்து விட்டு. நிறைநாழியை எடுத்து குழவிக்கல்லுக்கு மூன்று முறை சுற்றி விட்டு தேங்காய் பழம் வெற்றிலைபாக்கு நிறைநாழி நெல் இவைகளை மாத்தில் போட்டு விடுவார்கள் இந்த சாமாணம் வண்ணானுக்கு சேர்ந்தது. பிறகு எல்லோரும் வீட்டுக்கு வந்துவிடுவார்கள்,

11. கங்கணம் கட்டுதல்

மணவறை வாசலில் மாத்து விரித்து இருப்பதி பலகை போட்டு அதன் முன் முக்காலி போட்டு அதன் மேல் வெள்ளை மாத்து விரித்து.

முக்காலிமேல் ஒருதட்டம் வைத்து அரிசி ஒரு
வள்ளம் போட்டு. அரிசியின்மேல் வெற்றிலை
பாக்கு வைத்து பெரிய அச்சு வெல்லம் ஒன்
று வைப்பார்கள். பிறகு முக்காலிமுன் பிள்ளையார்
பிடித்து வைத்து தேங்காய் பழம் உடைத்து
வைத்து நிறைநாழி. விரளிமஞ்சள் கட்டிய
கங்கணத்தையும் பிள்ளையார் முன் வைத்து
மாப்பிள்ளையை மைத்துனருடன் பலகைமேல்
கிழக்குமுகமாக உட்கார வைத்து பெண்அரு
மைக்காரருக்கு நாவிதன் சொல்ல. மாப்பிள்ளை
இரண்டு கைகளையும் அருமைக்காரர் பிடித்து
அரிசியில் கைகோர்வையிடுவார். பிறகு நெய்
யில் விரலைத் தொட்டு நெருப்பின்மேல் போட்
டு கங்கணத்தை எடுத்து தூபம் காட்டி மாப்பிள்
ளையின் வலது கையில் கட்டுவார்கள். பிறகு நெரு
ப்பில் நெய்போட்டு பூஜை செய்து நிறைநாழி
யை எடுத்து பிள்ளையாருக்கு சுற்றி பிறகு மாப்
பிள்ளைக்கு இடது வலது மூன்று முறை சுற்றி
யபின் மாப்பிள்ளை எழுந்து சென்று விடுவார்.
பிறகு தட்டத்தில் உள்ள அரிசி நிறைநாழி நெல்
இவைகளை நாவிதனுக்கு கொடுப்பார்கள்.

12, மாப்பிள்ளை நாட்டுக்கல் போகுதல்

பெண் அருமைக்காரர் ஒருதட்டத்தில் சாதம்போட்
டு செஞ்சாதம் செய்து அதை வடை போல்

ஐந்து அடை சுட்டி பேழை மூடியில் வைத்து தேங்
காய் பழம் வெற்றிலை பாக்கு நிறைநாழி நெய்க்கிண்
ணம் எல்லாம் பேழை மூடியில் வைத்து சொம்பி
ல் தண்ணீர் எடுத்து வைப்பார். பிறகு மாப்பிள்ளைக்
கு மைத்துனர்கள் ஆடை ஆபரணம் அணிந்து
அலங்காரம் செய்து நெற்றியில் விபூதி பூசி
சந்தனப்பொட்டு வைத்து மாப்பிள்ளையை கூட்டி
வந்து மணவறை வாசலில் நிறுத்தி மைத்துனர்
அருகில் நிற்பார். பிறகு ஆண் அருமைக்காரர்
வந்து. பண்டாரத்திடம் பூமாலையை வாங்கி
கிழக்கு முகமாக நின்று சூரியனை கும்பிட்டு
பிறகு மாப்பிள்ளை கழுத்தில் மாலையை போடுவார்
மணவறை வாசலிருந்து நடைமாத்து போடு
வான் நடைமாத்து என்பது பெரிய சீலையை
வீதியில் நெடுக போட்டுக் கொண்டே போவான்
மாப்பிள்ளை அதன் மேல் நடந்து செல்வார்.
மேள வாத்தியம் தீவட்டி இவைகளுடன் மாப்பிள்
ளை துணைமாப்பிள்ளை பெண் அருமைக்காரர் இவர்
கள் நடைமாத்தில் முன் செல்வார். உறவினர்கள்
பின்னால் செல்வார்கள். நாட்டுக்கல் இருக்கும்
இடம் சென்று. மாப்பிள்ளை. துணைமாப்பிள்ளை
அருமைக்காரர் மூவரும் இரண்டு முறை
நாட்டுக்கல்லை சுற்றிவந்து. பிறகு மாப்பிள்ளை
யை நாட்டுக்கல்லின் பின்புறம் கிழக்கு முக
மாக நிறுத்தி. பிறகு பேழை மூடியில்

இருக்கும் சாமாணங்களை எடுத்து நாட்டுக்கல்
முன் வைத்து விட்டு வேளை முடிக்குல் மாப்பிள்ளை
யை நிறுத்தி விட்டு நாவிதனும் பெண் அருமைக்
காரரும் நாட்டுக்கல்லுக்கு நெய்துடைத்து
அரப்புத் தேய்த்து தண்ணீர் விட்டு சுத்தம்
செய்து மூன்று வெற்றிலை எடுத்து நாட்டுக்கல்
லுக்கு மூன்று பக்கம் வைத்து தார் நூலில் கட்
டி விடுவார்கள், பிறகு நூலுடன் தார்க் கருதை
எடுத்து செங்காதத்தால் செய்த அடையை
எடுத்து மாப்பிள்ளையின் சிரசில் ஒன்று
இடது தோளில் ஒன்று வலது தோளில்
ஒன்று. வலது கால் பாதத்தில் ஒன்று இடது
கால்பாதத்தில் ஒன்று. அடையை வைக்கும்
போது தார்க் கருதுடன் சேர்த்து வைக்க வேண்
டும் அடுத்த அடையை வைக்கும் போதும்
அதேமாதிரி வைக்க வேண்டும். தேங்காய் உடைத்
து வைத்து நெருப்பில் நெய்போட்டு பூஜை செய்
து விட்டு. பிறகு தார்க் கருதை எடுத்து. சிரசில்
இருக்கும் அடையை மாப்பிள்ளையின் பின்புரம்
தள்ளிவிட்டு. வலது புரம் இருக்கும் அடையை
வலது புரம் தள்ளிவிட்டு இடது புரம் இருக்
கும் அடையை இடது புரம் தள்ளிவிட்டு
இதே போல் கால்ப்பாதத்தில் இருக்கும் அடை
யையும் தள்ளுவார்கள். பிறகு நிறை நாழியை
எடுத்து நாட்டுக்கல்லுக்கு மூன்று முறை

சுற்றிவிட்டு மாப்பிள்ளையின் சிரசிற்கு மூன்று முறை சுற்றிவிட்டு பிறகு ஒரு வெற்றிலை எடுத்து மாப்பிள்ளையின் கையில் கொடுத்து அதில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றுவார்கள். அந்த தண்ணீரை மாப்பிள்ளை சூரியனை பார்த்து மூன்று முறை வீசி மூன்றாவது முறை வெற்றிலையை கீழே போட்டு விட்டு சூரியனை நமஸ்காரம் செய்வார். பிறகு மாப்பிள்ளை பேழை மூடியிலிருந்து அப்புறம் நிறுத்தி வைட்டு தேங்காய் பழம் நிறை நாழி நெல் இவைகளை பறையனுக்கு கொடுப்பார்கள். பிறகு பெண் அருமைக்காரர் பேழை மூடியை எடுத்து இடுப்பில் வைத்து சொம்பை எடுத்து வலது கையில் பிடித்துக் கொண்டு மாப்பிள்ளை துணைமாப்பிள்ளை அருமைக்காரர் மூன்று பேரும் நாட்டுக்கல்லை ஒருமுறை சுற்றி வந்து மேளவாத்தியத்துடன் நடைமாத்துப்போட கல்யாண வீட்டுக்கு வந்து சேருவார்கள்.

13. (இணைச்சீர் நடத்துதல்)

கல்யாண வாசலில் இணைச்சீர் செய்ய வசதியுள்ள இடத்தில் நாலுபந்தக்கால் நாட்டி வர்ணை மரம் தென்னை ஓலை நாலு காலையும்

கட்டி தென்னம் பாளை பூ. எலுமிச்சம் பழம்
வெற்றிலை. பூ. இவைகள் எல்லாம் மணவறைக்
கு கட்டி அலங்காரம் செய்து. மணவறை
யில் மாத்து விரித்து. அதன் மேல் இருப்பதி
பலகை போட்டு அதன் முன் முக்காலி போட்டு
பலகை முக்காலி இரண்டுக்கும் வெள்ளை மாத்து
விரித்து. முக்காலியின் மேல் பெரிய தட்டம்
வைத்து அதில் அரிசி நாழு வள்ளம் போடு
வார்கள் அரிசியின் மேல் வெற்றிலை பாக்கு
வைத்து பெரிய அச்சு வெல்லம் ஒன்று
வைப்பார்கள் பிறகு முக்காலியின் முன் பிள்ளை
யார் பிடித்து வைத்து. தேங்காய் பழம்
நிறை நாழி வெற்றிலை பாக்கு நெய்க்கிண்ணம்
செம்பில் தண்ணீர் வைப்பார்கள் பிறகு கர
கப்பானை இரண்டு எடுத்து அதில் ஒன்றில்
நெல் மற்றொன்றில் தண்ணீர் கொண்டு வந்து
பிள்ளையாருக்கு வலது பக்கம். சாணி சும்மாடு
கூட்டி அதன் மேல் வைத்து. இரண்டு கரக
ப்பானை மேலும் வெற்றிலை அழகாக வைத்து
அதன் மேல் பாக்கு வைப்பார்கள். பிறகு ஒரு
தட்டத்தில் சாதம் போட்டு பழம் சர்க்கரை
வைத்து. ஒரு இறு பாத்திரத்தில் தயிர் ஊற்றி
அதில் வெற்றிலையை கிள்ளிப்போட்டு கரகப்பானை
க்கு முன்னால் சும்மாடு வைத்து இரண்டையும்
வைப்பார்கள். பிறகு வெங்கல தீபகம்பம் கொ
ண்டு வந்து அதற்கு ஐந்து திரி போட்டு.

விளக்கு எண்ணெ ஊற்றி மணவறையில் பொருத்தி
வைப்பார்கள். பிறகு பெண் அருமைக்காரர்
பேழை மூடியில் பழம் ஒருசிப்பு, தேங்காய்
ஒன்று. வெற்றிலை பாக்கு சிறியவெல்லம் நான்கு
விரளி மஞ்சள் எலுமிச்சம் பழம். கூறைச்
சீலை ஜாக்கெட் பாடி. மாங்கல்யம். கண்ணாடி சீப்
பு பூ. இவைகள் எல்லாம் வைத்து மணவறை
க்கு கொண்டு வந்து ஆண் அருமைக்
காரரிடம் கொடுப்பார்கள். பிறகு மாப்பிள்ளை
க்கு அலங்காரம் செய்து. மைத்துனருட
ன் கூட்டி வந்து மணவறையை இரண்டு
சுற்று வந்து இருப்பதிப் பலகையில் கிழக்
கு முகமாக உட்கார வைத்து துணைமாப்பி
ள்ளை அருகில் உட்காருவார். பிறகு மாப்பிள்
ளையின் அக்காளோ அல்லது தங்கையோ
முறைப்படி யாரோ ஒருவர். புது சீலை கட்டி
தலைசீவி. பூவைத்து அலங்காரம் செய்து
அந்தப்பெண்ணின் நங்கை கொழுந்திகள்
துணைப்பெண்ணாக இருந்து மணவறைக்கு
கூட்டிவந்து மாப்பிள்ளைக்கு வலதுபுறம்
கிழக்கு முகமாக நிறுத்துவார்கள். பிறகு
ஆண் அருமைக்காரர் எழுந்து பூமாலை
யை எடுத்து. கிழக்கு முகமாக நின்று சூரி
யனை கும்பிட்டு. இணைப்பெண்ணுக்கு மாலை
யை கொடுப்பார். பெண்கள் அதை வாங்கி

இணைப்பெண்ணின் கழுத்தில் போடுவார்கள். பிறகு
ஆண் அருமைக்காரர் கூறைச்சேலையை எடுத்து
மடிப்புடன் விரித்து மாங்கல்யத்தை அதில்
கட்டுவார்கள். இணைப்பெண் தங்கமோ அல்லது
பணம் இடப்பட்டதை சேலையில் முடிவார்
இது மாப்பிள்ளைக்கு இணைப்பெண் கொடுக்கு
ம் பரிசு. பிறகு இவையெல்லாம் பேழைமூடி
யில் வைத்து ஆண் அருமைக்காரர் எடுத்
து நெருப்பில் நெய் போட்டு பூஜை செய்து
இணைப்பெண்ணுக்கு தலையில் சும்மாடு வைத்
து பேழைமூடியை தலையில் வைத்து. வலது
கையில் செம்புத் தண்ணீரைக் கொடுத்து
இணைப்பெண் தலையில் இருக்கும் பேழை
மூடியை கையில் பிடித்து. மணவறையை
இரண்டு சுற்று வந்து கிழக்கு முகமாக
நிறுத்துவார்கள். பிறகு ஆண் அருமைக்
காரர் பேழைமூடியை வாங்கி கீழே வைத்
து அதில் உள்ள தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு
எலுமிச்சம்பழம், சீப்பு கண்ணாடி இவை
களை எடுத்து மாப்பிள்ளையின் கையில் கொ
டுப்பார். பிறகு இணைப்பெண்ணை பேழைமூடிக்குள்
நிறுத்தி மாப்பிள்ளையிடம் இருக்கும் தேங்காய்
பழங்களை இணைப்பெண் மடியில் வாங்கி
கட்டிக் கொள்வார்கள் பிறகு

அருமைக்காரர் கூறைச் சேலையை எடுத்து
சேலையின் ஒருபக்கத்தை மாப்பிள்ளையின் வலது
கை கழுக்கட்டில் வைத்து பிடித்துக்கொள்
வார். சேலையின் மறுபக்க சிரகை இணைப்பெண
கையில் கொடுத்து இணைப்பெண் இரண்டுகை
யிலும் சேலையை பிடித்து கிழக்கு முகமாக
நேர் நிற்க வேண்டும். பிறகு அருமைக்காரர்
மாப்பிள்ளையின் இரண்டுகைகளையும் பிடித்து
சுட்டத்தில் இருக்கும் அரிசியில் கைகோர்
வையிடுவார். பிறகு பெரிய வெற்றிலை ஒன்றில்
அரிசி போட்டு பிள்ளையார் முன் வைத்துவிட்
டு நெருப்பில் நெய் போட்டு பூஜை செய்து
அரிசியை எடுத்து நாவிதன் கையில் கொ
டுக்கும் போது நாவிதன் குனிந்து அருமைக்
காரர் பாதத்தை தொட்டு கும்பிட்டு வெற்றிலை
அரிசியை வாங்கி. மங்கள வாழ்த்துப்பாடி,
கம்பர் வாழியை ஓதுவான். பிறகு அருமைக்
காரர் மாப்பிள்ளை கைகோர்வையை எடுத்து
விட்டு இரண்டு கைக்கும் இரண்டு வெற்
றிலை கொடுத்து விட்டு. நெருப்பில் நெய்
70 போட்டு தூபம் காட்டி பூஜை செய்து விட்டு
தயிரில் இருக்கும் வெற்றிலையை எடுத்து பிள்ளை
யாருக்கு மூன்று முறை அருகுமணம். மாப்பிள்
ளைக்கு மூன்று முறை. பிறகு இணைபெண்ணுக்கு

மூன்று முறை அருகுமணம் செய்தபின்பு. இணைப்
பெண்ணை வேளை மூடியை விட்டு நகர்த்தி விட்டு
வேளை மூடியை எடுத்து தலையில் வைத்து. பெண்
ணின் வலது கையில் சொம்புத்தண்ணீரை கொடுத்
து. மாப்பிள்ளை துணைமாப்பிள்ளை. இணைப்பெண்
துணைப்பெண்கள் இரண்டுபேர் ஆக ஐந்து
பேரும் மணவறையை ஏழுமுறை சுற்றிவந்து
இணைப்பெண்ணின் தலையில் இருக்கும் வேளை
மூடியை எடுத்து விடுவார்கள். இணைப்பெண்
வீட்டின் உள்ளே சென்று விடும். பிறகு
மணவறையில் இருக்கும் அரிசி தேங்காய்
பழம் நிறைநாழி நெல் இவைகள் மாப்பிள்ளை
வீட்டு நாவிதன் எடுத்துக்கொண்டு பெரிய
கூடையை போட்டு கரகப்பானையை மூடி
விடுவார்கள்,

14, மாப்பிள்ளை தாயாருடன் சாப்பிடுதல்,

மணவறையில் பலகை போட்டு அதன் முன்முக்
காலிபோட்டு மேலே வெள்ளைமாத்து விரித்து
மாப்பிள்ளையை பலகைமேல் உட்காரவைத்
து முக்காலிமேல் வாழை இலை போட்டு
பெண் அருமைக்காரர் இலைக்கு உப்புவைத்
து சாதம் கொண்டு வந்து வைத்து தயிர்
ஊற்றுவார். மாப்பிள்ளையின் தாயார் எதிரில்

உட்கார்ந்து சாதத்தை பிணைந்து மாப்பிள்ளைக்கு மூன்று கை சாதம் எடுத்துக் கொடுப்பார் மாப்பிள்ளை அதை வாங்கி சாப்பிடுவார் பிறகு தாயாரும் மூன்று கை அள்ளி சாப்பிட்டு விட்டு எழுந்து கை கழுவுவார்கள்.

15. மாப்பிள்ளை பிள்ளையார் கோவிலுக்கு போகுதல்,

நாவிதன் நாழி அரிசி கூடை கொண்டு வந்து பெண் அருமைக்காரரிடம் கொடுப்பான் பெண் அருமைக்காரர் அந்தக் கூடையில் ஐந்துபடி அரிசி தேங்காய் மூன்று பழம் மூன்று சீப்பு வெற்றிலை பாக்கு கலசப்பானை ஐந்து வைத்து ஒன்றில் ஒலைச்சிட்டு ஒன்றில் நூல் ஒன்றில் மஞ்சள் ஒன்றில் நெல் ஒன்றில் வெல்லம் இப்படி ஐந்து பானையிலும் போட்டு நாழி அரிசிக் கூடையில் வைப்பார்கள். பிறகு கூரைச்சீலை மாங்கல்யம். நெய்ச் சொம்பு இவைகள் எல்லாம் வைப்பார்கள். பிறகு மாப்பிள்ளையை அலங்காரம் செய்து தீவட்டி மேளதாளத்துடன் புறப்படுவார்கள். நாவிதன் நாழி அரிசிக் கூடையை தலையில் வைத்து உறவினர்களும் நண்பர்களும் எல்லோரும் புறப்படுவார்கள்-வண்ணான் நடை மாத்துப் போடுவான்.

முன் காலத்தில் மணவறை வாசலிருந்து மாப்பிள்ளை வீட்டுக்கு வரும் வரை வண்ணான் நடை மாத்து போடுவான். பிறகு மாப்பிள்ளை குதிரை மேல் ஏறி பிள்ளையார் கோவிலுக்கு செல்வார். தற்காலத்தில் இப்போது பிள்ளையார் கோவில் வரை வண்ணான் நடை மாத்துப் போட்டு மாப்பிள்ளை நடந்தே போவது வழக்கம் இப்படி எல்லோரும் பிள்ளையார் கோவில் சென்று சுவாமியை தெரிசனம் செய்து விட்டு மாப்பிள்ளையை கிழக்கு முகமாக நிறுத்தி மாப்பிள்ளை இரண்டு கையையும் ஏந்துவார் கையில் வெற்றிலை பாக்கு வைத்து அதன் மேல் தேங்காய் வைத்து. மூன்று முறை தண்ணீர் தேங்காய் மேல் ஊற்று வார்கள். மூன்று முறையும் மாப்பிள்ளை சூரியனை கும்பிடுவார் பிறகு உறவினர் யாரோ ஒருவர் அந்த தேங்காயை வாங்கி மாப்பிள்ளை சிரசை மூன்று முறை சுற்றி பிள்ளையார் கோவில் முன் இருக்கும் கல்லில் உடைத்து விடுவார். பிறகு மாப்பிள்ளை வீட்டை சேர்ந்த உறவினர்கள் மாப்பிள்ளையுடன் நாட்டுக்கல்லுக்கு பின் அருபதுமி தூரத்தில் நின்று கொள்வார்கள்

16. பெண் வீட்டார் மாப்பிள்ளை அழைக்க செல்லுதல்.

பெண் வீட்டார் ஒரு தட்டத்தில் தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு சந்தனம் பன்னீர். பூமாலை செம்பில் தண்ணீர் எல்லாம் எடுத்து பண்டாரத்திடம் கொடுத்து மேளவாத்தியம் தீவட்டியுடன் பெண் வீட்டு உறவினர்கள் எல்லோரும் புறப்பட்டு மாப்பிள்ளை நிற்கும் இடம் சென்று நாட்டுக்கல்லுக்கு இந்தப்பக்கம் சிறிது தூரத்தில் நின்று இரண்டு பார்ட்டியாரும் சிறிது நேரம் தமாஷ் பேசுவார்கள் பிறகு இரண்டு பார்ட்டியாரும் நமஸ்காரம் செய்து கொள்வார்கள் பிறகு பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கு வெற்றிலை பாக்கு கொடுப்பார்கள். பண்டாரம் தட்டத்தில் இருக்கும் மாலையை எடுத்து மாப்பிள்ளைக்கு போடுவார். பிறகு பறையருக்கு வெற்றிலை பாக்கு கொடுத்து விட்டு மாப்பிள்ளையை அழைத்து வருவார்கள்.

17. மாப்பிள்ளை விடுதி வீடு சேர்தல்.

கல்யாண வீட்டின் பக்கத்து வீட்டில் மாத்து விரித்து மாப்பிள்ளையை மேளதாளத்துடன் கூட்டிச் சென்று அந்த வீட்டில் விடுவார்கள் மாப்பிள்ளை வீட்டு உறவினர்கள் சிலர் மாப்பிள்ளையுடன் இருப்பார்கள்

பிறகு நாழி அரிசிக் கூடையை இறக்கி வைத்து கூறைச் சீலை மாங்கல்யம் கூரைப்பட்டு இவைகளை எடுத்து வைத்து விட்டு மற்ற சாமானங்களுடன் மறுபடியும் நாவிதன் தலையில் வைத்து பெண் அருமைக்காரரும் மற்றும் சில பெண்களும் மேள வாத்தியத்துடன் பெண் வீட்டுக்கு செல்வார்கள். பெண் வீட்டார் இவர்களை வாருங்கள் என்று சந்தோசமாக உபசரித்து நாழி அரிசிக் கூடை பெண் வீட்டார் வாங்கிப் பார்த்து சந்தோசப்பட்டு எல்லோரும் வெற்றிலை பாக்கு போட்டு சந்தோசமாக இருப்பார்கள்.

## 18. பெண்ணுக்கு குப்பாரி கொட்டுதல்,

பெண் அருமைக்காரர் பேழை மூடியில் தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு நெய்க்கிண்ணம் நிறைநாழி மஞ்சள் பொடி செம்பில் தண்ணீர் இவைகள் எல்லாம் கொண்டு வந்து மணவறையில் முக்காலி மேல் பெண் அருமைக்காரர் உட்கார்ந்து. நாவிதனும் அருமைக்காரரும் சூர நூலை எடுத்து ஏழு நூல் விட்டு கயிறு போல் முறுக்கி மஞ்சள் துவைத்து விரளி மஞ்சள் அதில் கட்டி பேழை மூடியில் வைத்து பெண் அருமைக்காரர்

பேழைமூடியை எடுத்து இடுப்பில் வைத்து
வலது கையில் சொம்பை எடுத்துக் கொண்டு
மேளவாத்தியத்துடன் நடுவீதிக்கு சென்று
மாத்து விரித்து பேழைமூடியை மாத்தின்
மேல் வைத்து குழவிக்கல் பேழைமூடியில்
வைத்து தேங்காய் உடைத்து வைத்து நெருப்
பில் நெய் போட்டு பூஜை செய்து பிறகு கங்
கணத்தை எடுத்து கிழக்கு முகமாக நின்று
சூரியனை கும்பிட்டு பிறகு குழவிக் கல்லுக்கு
மூன்றுமுறை ஓங்கி கங்கணத்தை பேழைமூடி
யில் வைத்து விட்டு தேங்காய் பழம் நிறை
நாழி நெல் இவைகளை மாத்தில் போட்டு
விட்டு பேழைமூடியை எடுத்துக் கொண்டு
வீட்டுக்கு வருவார்கள்.

19. பெண்ணுக்கு கங்கணம் கட்டுதல்.

மணவறையில் மாத்து விரித்து முக்காலி
போட்டு அதற்கு பின் இருப்பதிபலகை
போட்டு மேலே வெள்ளை மாத்து விரித்து
முக்காலி மேல் சுட்டம் வைத்து அரிசி ஒரு
வள்ளம் போட்டு அதன் மேல் வெற்றிலை பாக்கு
வெல்லம் வைத்து முக்காலியின் முன் கிழக்கு
முகமாக பிள்ளையார் பிடித்து வைத்து
தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு

நிறை நாழி நெய்க்கிண்ணம் செம்பில் தண்ணீர் இவை எல்லாம் பிள்ளையார் முன் வைத்து பிறகு பெண்ணை கூட்டி வந்து மணவறையில் பலகைமேல் கிழக்கு முகமாக உட்கார வைத்து பெண் அருமைக்காரர் பெண்ணின் இரண்டு கைகளையும் பிடித்து அரிசியில் கைகோர்வை யிடுவார். பிறகு தேங்காயை உடைத்து வைத்து நெருப்பில் நெய் போட்டு தண்ணீர் சுற்றிப்போட்டு பூஜை செய்வார். பிறகு கங்கணத்தை எடுத்து தூபம் காட்டி கிழக்கு முகமாக நின்று சூரியனை கும்பிட்டு பிறகு பிள்ளையாரை கும்பிட்டு பெண்ணின் வலது கையில் கட்டுவார்கள் பிறகு தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு நிறை நாழி நெல் இவைகளை பெண் வீட்டு நாவிதனுக்கு கொடுத்து விடுவார்கள்,

20. பொன்பூட்டுதல்

பெண் அருமைக்காரர் மாப்பிள்ளை இருக்கும் வீட்டில் பேழை மூடியில் தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு கூறைச்சேலை திங்கமோதிரம் இவைகள் எல்லாம் பேழை மூடியில் வைத்து எடுத்துக்கொண்டு செம்பில் தண்ணீர் எடுத்துக் கொண்டு மேள வாத்தியத்துடன் பெண் இருக்கும் வீட்டு மணவறை

வாசலில் மாத்து விரித்து முக்காலி போட்டு அதன்
முன் பிள்ளையார் பிடித்து வைத்து தேங்காய்பழம்
வெற்றிலை பாக்கு நிறை நாழி இவைகள் எல்லாம்
வைத்து பெண் அருமைக்காரர் பேழை மூடி
யை பிள்ளையார் முன் வைப்பார்கள், பிறகு பெண்ணை
துணைப்பெண்ணுடன் கூட்டி வந்து முக்காலி
மேல் கிழக்கு முகமாக உட்கார வைப்பார்கள்,
பிறகு தேங்காய் உடைத்து வைத்து பெண்
அருமைக்காரர் நெருப்பில் நெய் போட்டு பிள்
ளையாருக்கு பூஜை செய்து விட்டு கூறைச்
சீலையை வெற்றிலை பாக்குடன் எடுத்து கிழக்
கு முகமாக நின்று சூரியனை கும்பிட்டு. பிறகு
பெண்ணுக்கு கூறைச்சீலையை கொடுப்பார்
பெண் அதை வாங்கி துணைபெண் உதவியால்
அதைக் கட்டுவார்கள். பிறகு அருமைக்கார
ர் பேழைமூடியில் இருக்கும் தேங்காய்
பழம் வெற்றிலை பாக்கு இவைகளை எடுத்துக்
கொடுப்பார்கள். அதை பெண் மடியில் கட்டி
மறுபடியும் முக்காலிமேல் உட்காரவும்.
பிறகு பெண் அருமைக்காரர் நெருப்பில் நெய்
போட்டு பூஜை செய்து தங்க மோதிரத்தை
வெற்றிலை பாக்கில் வைத்து. கிழக்கு முகமாக நின்
று சூரியனை நமஸ்காரம் செய்து பிறகு பெண்ணின்
கையில் மோதிரத்தை போடுவார்கள். பிறகு

பெண் முக்காலியை விட்டு எழுந்து பெண் அருமைக்காரரை நமஸ்காரம் செய்ததும் வீட்டுக்குள் அழைத்துச் செல்வார்கள்.

21. தாய்மாமன் பெண்ணுக்கு பட்டம் கட்டுதல்

பெண்ணுடைய தாய்மாமன் மற்றுமுள்ள மாமன் மார்கள் எல்லோரும் கைகால் சுத்தம் செய்து வருவார்கள் பண்டாரம் அவர்களுக்கு விபூதி கொடுத்து சந்தனப் பொட்டு வைப்பார். பிறகு பெண் வீட்டார் மாமன்மார்களுக்கு புது வேஷ்டி கொடுப்பார்கள். மாமன் தங்கத்தில் பட்டம் செய்து கொண்டு வந்திருப்பார். பிறகு மாமன் மார்கள் எல்லோரும் பால் பழம் சாப்பிடுவார்கள். பெண்ணை அலங்காரம் செய்வார்கள் பெண் அருமைக்காரர் பேழை மூடியில் தேங்காய் பழம் நிறைநாழி வெற்றிலை பாக்கு நெய்க்கிண்ணம் ஒரு தட்டத்தில் சாதம் போட்டு சுண்ணாம்பு மஞ்சத்தூள் கலந்து 5 அடை செய்து பேழை மூடியில் வைப்பார். பிறகு பெண்ணின் அத்தை மகள் அல்லது மாமன் மகள் பெண்ணை மணவறைக்கு கூட்டி வருவார்கள் பெண்ணை கிழக்கு முகமாக நிறுத்தி தாய் மாமன் பெண்ணின் நெற்றியில் பட்டம் கட்டுவார் பிறகு சந்தனத்தில் பொட்டு வைப்பார். எல்லா மாமனும் பொட்டு வைப்பார்கள் பிறகு

## ௨௨, பெண் நாட்டுக்கல்லுக்கு செல்லுதல்

முன்காலத்தில் பெண்ணை தாய்மாமன் எடுத்து தோளில் வைத்துச் செல்வார் தற்காலத்தில் அப்போது பெண்ணை நடைமாத்துப்போட்டு நடந்தே அழைத்துச் செல்வது வழக்கம் பெண் அருமைக்காரர் பேழை மூடியில் இருக்கும் சாமான்களோடு அப்படியே எடுத்து இடுப்பில் வைத்து சொம்புத்தண்ணீரை வலதுகையில் எடுத்துக்கொண்டு. பிறகு வண்ணான் நடைமாத்துப்போட பெண்ணை அழைத்துக் கொண்டு உறவினர்கள் உள்பட மேளவாத்தியத்துடன் நாட்டுக்கல்லுக்கு செல்வார்கள். மணப்பெண்ணும் அருமைக்காரரும் துணைப்பெண்ணும் மூன்று பேரும் நாட்டுக்கல்லை இரண்டு முறை சுற்றி வந்து பெண்ணை கிழக்கு முகமாக நிறுத்துவார்கள் பிறகு பேழை மூடியில் இருக்கும் சாமானங்களை எடுத்து விட்டு பெண்ணை பேழை மூடிக்குள் நிறுத்துவார்கள். நாவிதனும் பெண் அருமைக்காரரும் நாட்டுக்கல்லுக்கு நெய் துடைத்து அரப்புத்தேய்த்து தண்ணீர் விட்டு சுத்தம் செய்து மூன்று வெற்றிஎடுத்து நாட்டுக்கல்லின் மூன்று பக்கம் வைத்து தார் நூலில் கட்டுவார்கள், பிறகு

பிறகு செஞ்சாதத்தில் செய்து அடையை எடுத்து தார்கருதுடன் சேர்த்து பெண்ணின் சிரசில் ஒன்று வலது புறம் தோளில் ஒன்று இடது புறம் தோளில் ஒன்று வலது கால் பாதத்தில் ஒன்று இடது கால் பாதத்தில் ஒன்று வைத்துவிட்டு தேங்காயை உடைத்து வைத்து நெருப்பில் நெய்போட்டு பூஜை செய்துவிட்டு தார்க்கருதை எடுத்து பெண்ணின் சிரசில் இருக்கு அடையை எடுத்து சிரசை ஒரு சுற்று சுற்றி அப்படியே பின்புறம் போட்டுவிட்டு வலது தோளில் இருக்கும் அடையை வலதுபுறம் போட்டு இடதுதோளில் இருக்கும் அடையை இடதுபுறம் போட்டு கால்பாதத்தில் இருக்கும் அடையையும் அப்படியே செய்வார்கள் அதன் பிறகு நிறைநாழியை எடுத்து நாட்டுக்கல்லுக்கு மூன்று முறை சுற்றி மறுபடி பெண்ணின் சிரசிற்கு மூன்று முறை சுற்றிவிட்டு ஒரு வெற்றிலை பாக்கு பெண்ணின் கையில் கொடுத்து தண்ணீர் கொஞ்சம் வெற்றிலை மேல் ஊற்றுவார்கள். மணப்பெண் அந்த தண்ணீரை மூன்று முறை சூரியனைப்பார்த்து வீசிவிட்டு வெற்றிலையை கீழே போட்டுவிட்டு சூரியனை நமஸ்க்கரிக்க வேண்டும்

பிறகு பெண்ணின் பேழை மூடியை விட்டு அப்புரம்
நிருத்தி விட்டு தேங்காய் பழம் வெற்றிலை பாக்
கு நிறை நாழி நெல் இவைகளை பறையனுக்கு
கொடுப்பார்கள். பெண் அருமைக்காரன்
பேழை மூடியை எடுத்து இடுப்பில் வைத்து
சொம்பை எடுத்துக் கொண்டு மூன்றுபேரு
ம் மறுபடியும் ஒரு முறை நாட்டுக்கல்லை
சுற்றி வந்து. வண்ணான் நடை மாத்துப்போட்
டு மேளவாத்தியத்துடன் கல்யாண வீட்டு
க்கு வருவார்கள்.

௩௩, முகூர்த்தத்துக்கு மணவறை அலங்கரித்தல்

பெண் இருக்கும் வீட்டு வாசலில் பந்தக்கால்
நாலுபக்கமும் சரியாக இருந்தால் அதில் அல
ங்காரம் செய்வார்கள். இல்லாவிட்டால் நால்
பக்கம் மூங்கில் நட்டு அதில் வாழைமரம் தென்
னை ஓலை இவைகள் கட்டி மேலே வண்ணான்
மேக்கட்டி சீலை கட்டுவான். அதற்கு கீழ் இரு
கயிறு கட்டி தென்னம்பாளையில் இருக்கும்
பூவை எடுத்து தொங்க விட்டு. வெற்றிலை
எலுமிச்சம் பழம் இவைகளை கட்டி தொங்
க விடுவார்கள் பிறகு பண்டாரம் பூ கட்டி
தொங்கவிடுவார். வண்ணான் மணவறையை சுற்
றி மேலே தோரணச் சீலை கட்டுவான் பிறகு

வண்ணான் கீழே மாத்துகள் விரித்து மணவறைக்
குள் இடது புறம் மாப்பிள்ளைக்கு உட்காரும்
பலகை போட்டு அதற்குமுன் ஒரு முக்காலி
போட்டு மாப்பிள்ளையின் வலது புறம் பெண்ணு
க்கு பலகை போட்டு அதன் மீது வெள்ளை
மாத்து விரிப்பார்கள். பிறகு முக்காலிமேல்
பெரிய தட்டம் வைத்து அரிசி நாலு வள்ளம்
போட்டு அதன் மேல் வெற்றிலை பாக்கு பெரி
ய வெல்லம் வைப்பார்கள். முக்காலி முன் பிள்ளை
யார் பிடித்து வைத்து அருகம் புல் குத்தி
தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு நிறைநாழி
நெய்க்கிண்ணம். செம்பில் தண்ணீர் இவைகளை
எல்லாம் வைத்து பிறகு கரகப்பானை இரண்டு
எடுத்து ஒருபானையில் நெல். ஒரு பானையில்
தண்ணீர் ஊற்றி இரண்டையும் கொண்டு வந்து
பிள்ளையாருக்கு வலது புறம் சாணியில் சும்மா
டு செய்து இரண்டு பானையும் வைத்து அதன்
மேல் வெற்றிலை நிறைய வைத்து அலங்காரம்
செய்து வெற்றிலை மேல் பாக்கு வைப்பார்கள்
பிறகு ஒரு தட்டத்தில் சாதம் போட்டு பழம்
சர்க்கரை வைத்து. ஒரு சிறிய பாத்திரத்தில்
தயிர் ஊற்றி அதில் வெற்றிலை கிள்ளிப்போட்
டு இரண்டையும் பிள்ளையாரின் வலது புறம்
முன்னால் சாணியில் இரண்டு சும்மாடு

வைத்து அதன் மேல் சாதத்தையும் தயிரையும் வைப்பார்கள் பிறகு வெண்கல தீபகம்பம் ஐந்து திரிபோட்டு பொருத்தி வைத்து. ஒரு தட்டத்தில் இரண்டு தேங்காய், பழம் ஒரு சீப்பு வெற்றிலை பாக்கு, சூடம், சாம்பிராணி, சந்தனம், சிகப்பு, மஞ்சள் பொடி, பச்சை அரிசி ஒரு படி, ஊதுபத்தி, எல்லாம் வைத்து கொண்டு வந்து வைக்கவும். ஒரு கிண்ணத்தில் சந்தனம் போட்டு பன்னீர் விட்டு கலந்து வைத்து விடுவார்கள். பிறகு பிராமணர் வந்து மணவரையில் வடக்கு முகமாக உட்காருவார் ஐயர். பிராமணர் அரசமரத்தின் குச்சி. மாவிலை அதாவது மாமரத்தின் தழை கொண்டு வருவார்

௨௪, முகூர்த்தம் நடக்குதல்)

மாப்பிள்ளையை மைத்துனர்கள் நன்றாக அலங்காரம் செய்து மேள வாத்தியத்துடன் கூட்டி வருவார்கள். மாப்பிள்ளையை பெண் வீட்டின் முன்னால் நிறுத்தி. நாவிதன் ஒரு தட்டத்தில் சுண்ணாம்பு மஞ்சள் பொடி போட்டு தண்ணீர் விட்டு கலந்தால் சிகப்பு நிறமாக இருக்கும். ஒரு சொம்பில் தண்ணீரும் வைத்திருப்பான். ஒரு சிறிய பலகை போட்டு மாப்பிள்ளையை அதன் மேல் நிறுத்தி மாப்பிள்ளையின் பாதத்தை தண்ணீர் விட்டு சுத்தம் செய்து. பெண் அருமைக்காரர் தட்டத்தில்

இருக்கும் சிகப்பு தண்ணீரை எடுத்து மாப்பிள்ளையின் முன் இடது வலது மூன்று முறை சுற்றி இதை ஆலாத்தி எடுத்தல் என்று சொல்வார்கள். பிறகு அந்த தண்ணீரை மாப்பிள்ளையின் பாதத்தின் முன் நீளமாக ஊற்றி விடுவார்கள். பிறகு மாப்பிள்ளையை உள்ளே கூட்டிவந்து மணவரையை இரண்டு முறை சுற்றி வந்து பலகைமேல் உட்காரவைத்து. மைத்துனர் இடதுபுரம் அருகில் உட்காரவேண்டும். பிறகு துணைப்பெண்கள் பெண்ணை அலங்காரம் செய்து வெளியே கூட்டிவந்து மணவரையை இரண்டுமுறை சுற்றி வந்து பலகைமேல் உட்காரவைத்து துணைப்பெண்கள் இருவரும் அருகில் உட்காருவார்கள். பிறகு பிராமணர் ஒரு சொம்பில் தண்ணீர் வைத்து சொம்பின் மேல் மாங்குழை சுற்றியும் வைத்து அதன் மேல் தேங்காய் ஒன்று வைத்து. மஞ்சள் பொடி தண்ணீர் விட்டு பிசைந்து சொம்பின் நாலு பக்கமும் பொட்டு வைத்து அதன் மேல் சிகப்பு வைப்பார். பிறகு கலசத்தின் முன் வாழை இலை போட்டு. பச்சை அரிசியை அதில் போட்டு ஒரு பக்கம் கொஞ்சம் அரிசியை மஞ்சள் பொடி கலந்து பிசைந்து வைப்பார். பிறகு தட்டத்தில் இருக்கும் தேங்காயை

உடைத்து மஞ்சள் துடைத்து அதே கூடடத்தில் வைத்துவிட்டு. வாழை இலை முன் கீழே நெல் உமிபோட்டு அதன் மீது அரசங்குச்சி போட்டு நெய் ஊற்றி நெருப்பை பற்றவைத்து அக்கினி குண்டம் வளர்த்துவார் ஐயர். பிறகு மந்திரம் சொல்லிக்கொண்டே பெண் மாப்பிள்ளை சிரசில் மஞ்சள் அரிசியை போடுவார். பிறகு மாங்கல்யத்தை வாங்கி தேங்காய் பழம் இருக்கும் கூட்டத்தில் வைத்து கூடம் பொருத்தியின் ஐயாருக்கு பூஜை செய்து பண்டாரத்திடம் கொடுப்பார் பண்டாரம் அதை வாங்கி உறவினர் எல்லோருக்கும் திபார்த்தனை கொடுப்பார் உறவினர்கள் எல்லோரும் அதைப்பார்த்து நமஸ்க்காரம் செய்வார்கள். பிறகு ஐயர் மாங்கல்யத்தை எடுத்து ஆண் அருமைக்காரரிடம் கொடுப்பார். ஆண் அருமைக்காரர் அதை வாங்கி மாப்பிள்ளையை எழுந்து நிற்க செய்து மாங்கல்யத்தை கொடுப்பார் மாப்பிள்ளை பெண்ணின் எதிரில் மேற்கு முகமாக நிற்பார் பெண்ணும் எழுந்து நிற்க வேண்டும். மாப்பிள்ளை பெண்ணின் கழுத்தில் மாங்கல்யத்தை கட்டுவார். மூன்று முடி போட்டு கட்ட வேண்டும். பிறகு மாப்பிள்ளை கழுத்தில் இருக்கும் மலர் மாலையை எடுத்து மாப்பிள்ளை

பெண் கழுத்தில் போடுவார் பிறகு பெண் கழுத்தில்
இருக்கும் மலர்மாலையை எடுத்து பெண் மாப்
பிள்ளை கழுத்தில் போடுவார். இதை மாலைமாற்
றுதல் என்று சொல்வார்கள். பிறகு பெண்
மாப்பிள்ளையை முன்போல் உட்காரச் செய்து
மாப்பிள்ளையின் மைத்துனருக்கு புதுவேஷ்டி
சார்ட் துண்டு எல்லாம் கட்டி சந்தனப் பொட்
டு வைத்து அலங்காரம் செய்து. மாப்பி
ள்ளைக்கு முன் அரிசிக்கு முன் ஒரு பலகை போட்
டு மாப்பிள்ளை மைத்துனரை மேற்கு முகமாக
எதிரில் உட்கார வைத்து. மாப்பிள்ளையின் கை
மைத்துனர் கை இரண்டையும் சேர்த்து
கோர்த்து அருமைக்காரர் அரிசியில்
கை கோர்வையிடுவார். பிறகு அருமைக்
காரர் ஒரு பெரிய வெற்றிலை எடுத்து அதில்
அரிசி போட்டு பெண் மாப்பிள்ளையிடம் இருக்கும்
மாலையில் கொஞ்சம் பூ கிள்ளி வெற்றிலை அரி
சியில் போட்டு பிள்ளையார் முன் வைத்து
நெருப்பில் நெய் போட்டு தண்ணீர் சுற்றி
பூஜை செய்வார். பிறகு நாவிதன் புது வேஷ்
டி கட்டி விபூதி பூசி சந்தனப் பொட்டு
வைத்து வருவான். அருமைக்காரர் வெற்
றிலையில் இருக்கும் அரிசியை எடுத்து
நாவிதன் கையில் கொடுப்பார். நாவிதன்

அருமைக்காரரை நமஸ்க்காரம் செய்து அரிசி யை வாங்கி வாத்தியத்தை நிறுத்தி விட்டு நாவிதன் மங்கள வாழ்த்து பாடுவான் பிறகு மேளவாத்தியங்கள் வாசிக்கச் சொல்லி அருமைக்காரர் மாப்பிள்ளை மைத்துனர் கைகோர்வையை எடுத்து விடுவார். மைத்துனர் மாப்பிள்ளை அருகில் சென்று உட்காருவார் பிறகு அருமைக்காரர் நெய்யில் கை தொட்டு நெருப்பில் போட்டு தண்ணீர் சுற்றி பூஜை செய்து. தயிரில் இருக்கும் வெற்றிலையை எடுத்து இரண்டாக கிள்ளி முதலில் பிள்ளையாருக்கு மூன்று முறை அருகுமணம் செய்து. வெற்றிலையை வேறு பாத்திரத்தில் போட்டு விட்டு மறுபடியும் பூஜை செய்து விட்டு தயிர் இருக்கும் வெற்றிலையை எடுத்து மாப்பிள்ளைக்கு மூன்று முறை அருகு மணம் செய்து வெற்றிலையை போட்டு விட்டு, மறுபடியும் பூஜை செய்து விட்டு தயிரில் இருக்கும் வெற்றிலையை எடுத்து பெண்ணுக்கு மூன்று முறை அருகு மணம் செய்வார். பிறகு நெருப்பில் நெய் போட்டு பூஜை செய்வார்,

25- கங்கணம் அவிழ்த்தல்

பிறகு வெற்றிலை பாக்கு வெல்லம் கிரணையும் மாப்பிள்ளையின் வலது கையில் கொடுத்து

பிறகு பண்டாரம் தயிர் இருந்த பாத்திரத்தை எடுத்து மாப்பிள்ளையின் கை அருகில் பிடித்துக் கொள்வார் அருமைக்காரர் கங்கணத்தை அவிழ்த்து தயிர் கிண்ணத்தில் போடுவார் இதேபோல் பெண் கங்கணத்தையும் அவிழ்த்து பாத்திரத்தில் போடுவார்கள். பிறகு பெண்ணும் மாப்பிள்ளையும் எழுந்து. மாப்பிள்ளையின் வலது கை சுண்டு விரலும். பெண்ணின் வலது கை சுண்டு விரல் இரண்டையும் சேர்த்து கோர்த்து பட்டுத்துணி (இதை வஸ்திரம் என்று சொல்வார்கள்) வஸ்திரத்தால் பெண் மாப்பிள்ளை கையை சுற்றி பெண் மாப்பிள்ளை இருவரும் சேர்ந்து மணவறையை ஒரு சுற்று வந்து வீட்டுக்குள் கூட்டிச் சென்று கிழக்கு முகமாக நிறுத்தி அருமைக்காரர் கைகோர்வையை எடுத்து விடுவார். பிறகு பெண் மாப்பிள்ளை இருவரும் முன்போலவே மணவறையில் வந்து உட்காருவார்கள்.

## 26. குலம் ஓதுதல்

பெண் அருமைக்காரர் ஒரு பேழை மூடியில் வஸ்திரத்தை மடித்து வைத்து அதன் மேல் வெற்றிலை பாக்கு வைத்து. ஒரு வெற்றிலையில் சிகப்பு குங்குமம் வைத்து நெய் போட்டு கலக்கி பேழை மூடியில் வைத்து

பெண் அருமைக்காரர் நெருப்பில் நெய் போட்டு
பிள்ளையாருக்கு பூஜை செய்து. பேழை மூடியை
கையில் எடுத்து கிழக்கு முகமாக நின்று சூரி
யனை நமஸ்க்காரம் செய்து பேழை மூடியை
கீழே வைத்து ஒரு வெற்றிலையை எடுத்து
மாப்பிள்ளையின் வலது தோளில் நேராக வை
த்து இதுபோல் பெண்ணின் வலது தோளி
லும் வைத்து. மாப்பிள்ளையின் வலது கை
சுண்டு விரலில் சிகப்பைத் தொட்டு பெண்
தோளில் இருக்கும் வெற்றிலையில் துடைக்க
வேண்டும் இதுபோல் பெண்ணும் சிகப்பை
தொட்டு மாப்பிள்ளையின் தோளில் இருக்கும்
வெற்றிலையில் துடைக்கவேண்டும் பிறகு
நாவிதன் தங்கத்தால் சிறிய சிப்பும் புளி
உப்புக்கல் சேர்த்து பெண் அருமைக்காரர்
கையில் கொடுப்பான். பிறகு நாவிதன் பெண்
வீட்டுக்குலத்தையும் மாப்பிள்ளை வீட்டுக்
குலத்தையும் கேட்டு. உப்பைத் தொட்டு
புளியைத் தொட்டு சிறுமாங்கல்யத்தை தொட்டு
சிக்கணக்கட்டி கணவாள குலத்துப் பெண்
70 ஆந்தை குலத்துக்கு பாரியாக. என்று நாவிதன்
மூன்று முறை சொல்லும் போது பெண் அருமை
க்காரர் அதே மாதிரி சொல்லிக்கொண்டு

தங்கச்சீப்பில் பெண் சிரசில் மூன்று முறை சீவி விடுவார். பிறகு பெண்ணை வீட்டுக்குள் அழைத்துச் செல்வார்கள் மாப்பிள்ளையை விடுதிக்கு அழைத்துச் செல்வார்கள். பிறகு தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு தட்டத்தில் இருக்கும் அரிசி நிறை நாழி நெல் இவைகளை பெண் வீட்டு நாவிதன் எடுத்துக் கொள்வான்.

27. மாப்பிள்ளைக்கு தண்ணீர் வார்த்தல்

கல்யாண வீட்டு வாசலில் தண்ணீர் ஒரு பாத்திரத்தில் கொண்டுவந்து வைத்து. பெண் அருமைக்காரர் ஒரு தட்டத்தில் சாதம் போட்டு மஞ்சள் பொடி சுண்ணாம்பு கலந்து செஞ்சாதம் செய்து வைத்து ஒரு பக்கம் வெள்ளை சாதம் வைத்து கொண்டுவந்து. பெண் அருமைக்காரர் முதலில் மாப்பிள்ளையின் சிரசில் நெய் தேய்த்து பிறகு அரப்புத்தேய்த்து மூன்று சொம்பு தண்ணீர் ஊற்றுவார்கள் பிறகு தட்டத்தில் வெள்ளைச் சாதம் போட்டு நெருப்பில் நெய் போட்டு மாப்பிள்ளை முகத்துக்கு தூபம் காட்டி சாதத்தை கீழே போட்டு விட்டு தட்டத்தில் தண்ணீர் ஊற்றி மூன்று முறை சுற்றிப்போட்டு மூன்று சொம்பு தண்ணீர் ஊற்றுவார்கள், பிறகு தட்டத்தில் செஞ்சாதம் போட்டு நெருப்பில் நெய் போட்டு முகத்துக்கு தூபம் காட்டி சாதத்தை எடுத்து மாப்பிள்ளையின் சிரசை

மூன்று முறை சுற்றி சாதத்தை கீழே போட்டு
விட்டு தட்டத்தில் தண்ணீர் ஊற்றி மூன்று
முறை சுற்றிப் போட்டு. பிறகு நிறைய தண்ணீர்
விட்டு மாப்பிள்ளை நன்றாக குளித்தபின் பெண்
ணின் தகப்பனார் பேழை மூடியில் கல்யாண
வேஷ்டி. சட்டை. பனியன். துண்டு. இவைகள்
எல்லாம் பேழை மூடியில் வைத்து அதன்
மேல் வெற்றிலை பாக்கில் தங்கமோதிரமோ
அல்லது பணமோ வைத்து பெண் அருமை
க்காரரிடம் கொடுப்பார். மாப்பிள்ளையை
கிழக்கு முகமாக நிறுத்தி பெண் அருமைக்
காரர் பேழை மூடியை எடுத்து கிழக்கு
முகமாக நின்று சூரியனை நமஸ்க்காரம் செய்
து மாப்பிள்ளையிடம் கொடுக்கும் போது
மாப்பிள்ளை அருமைக்காரரை நமஸ்க்காரம்
செய்து வாங்குவார். பிறகு மைத்துனர்
மாப்பிள்ளைக்கு வேஷ்டி கட்டி சட்டை
போட்டு தலைசீவி அலங்காரம் செய்வார்
பிறகு பண்டாரம். மாப்பிள்ளைக்கு விபூதி கொ
டுத்து சந்தனப்பொட்டு வைத்து விடுவார் பிறகு
பெண்ணுக்கு இதுபோல் தண்ணீர் வாத்து புதுச்
சேலை ஜாக்கெட் பேழை மூடியில் வைத்துக் கொடு
ப்பார்கள் பெண் அதை வாங்கிக் கொண்டு

துணைப் பெண்ணுடன் வீட்டுக்குள் சென்று விடுவார்கள். பிறகு பெண் அருமைக்காரர் நெய் அரப்புத் தேய்த்து குளித்து வண்ணானிடம் வேறு சேலை வாங்கி கட்டுவார்கள்.

28. கரகம் இறக்குதல்

மணவறையில் நெல் தண்ணீர் போட்டு வைத்த இரண்டு கரகத்தையும் கூடையில் மூடி வைத்திருப்பார்கள். நாவிதன் சாணி நெருப்பு இரண்டும் கொண்டு வருவான். பெண் அருமைக்காரர் ஒரு தட்டத்தில் சாதம் போட்டு அதில் சர்க்கரை, பழம் வைத்து. நெய்க்கிண்ணம் சொம்பில் தண்ணீர் கொண்டு வருவார். பெண் அருமைக்காரர் சிறிது சாணி எடுத்து கூடையை சுற்றியும் கோடு போல் வழித்து பிறகு கை கழுவிக்கொண்டு நெருப்பில் நெய் போட்டு தூபம் காட்டிப்பூஜை செய்து கூடையை அப்புறம் எடுப்பார்கள். தட்டத்தில் இருக்கும் சாதத்தை நாவிதனுக்கு கொடுப்பார்கள். பிறகு இணைச்சீர் நடந்த இடத்தில் இருக்கும் கரகத்தையும் இதே மாதிரி பூஜை செய்து எடுப்பார்கள், பிறகு.

29. சட்டுவச்சாதம் போடுதல்.

மாத்து விரித்து அதன்மேல் பலகைபோட்டு அதன் முன் முக்காலி ஒன்று வைத்து மாப்பிள்ளையை துணைமாப்பிள்ளையுடன் கூட்டிவந்து பலகைமேல் உட்காரவைத்து கிழக்கு முகமாக பிறகு பெண் அருமைக்காரர் ஒருதட்டத்தில் சாதம் காய்பதார்த்தம் குழம்பு எல்லாடம் கொண்டு இரும்பினால் செய்த சட்டுவம் கொண்டு வருவார்கள். சட்டுவத்தை தோசைதிருப்பி என்றும் சொல்வார்கள். பிறகு மாப்பிள்ளையின் முன் முக்காலிமேல் வாழை இலைபோட்டு முக்காலியின் முன் பேழை மூடி வைத்து பெண்ணை கூட்டிவந்து பேழை மூடிக்குள் நிறுத்தி மேற்கு முகமாக நிறுத்துவார்கள். பிறகு பெண் சாதத்தை எடுத்து சட்டுவத்தால் மூன்று முறை இலையில் தள்ளவேண்டும் பிறகு பெண்ணை கூட்டிப்போய் விடுவார்கள். பிறகு துணைமாப்பிள்ளைக்கு. மணப்பெண்ணுக்கு. இணைப்பெண்ணுக்கும் எல்லோருக்கும் இலைபோட்டு அருமைக்காரர் சாதம் போடுவார்கள் எல்லோரும் சாப்பிட்டபின். உறவினர்கள் எல்லோருக்கும் விருந்துபசாரம் நடக்கும் பிறகு.

30. மொய் வாங்குதல்,

கல்யாண வாசலில் மாத்து விரித்து. உறவினர்கள் யாவரும் அதில் உட்கார்ந்து. பெரிய தட்டத்தில் வெற்றிலை பாக்கு கொண்டு வந்து வைப்பார்கள் சபையின் நடுவில் ஒரு முக்காலி போட்டு அதன் மேல் ஒரு தட்டம் வைத்து. ஒருவர் ஒரு நோட் புஸ்தகம் வைத்து மொய் வைப்பது எவ்வளவு ரூபாய். அவர்கள் ஊர். அவர்கள் பெயர் எல்லாம் எழுதுவார். ஒவ்வொரு உறவினரும் தங்கள் இஷ்டம் போல் 5 ரூபாய் 10 ரூபாய் இப்படி பல வகையில் வைப்பார்கள். மாப்பிள்ளை வீட்டுக்கு தனியாக பெண் வீட்டுக்கு தனியாக மொய் வாங்குவார்கள். மொய் வாங்கி முடிந்ததும் மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாருக்கு 101-4-0 பரியம் கொடுப்பார்கள். பிறகு பெண் அருமைக்காரரும் மற்றும் சில பெண்களும். மேள வாத்தியத்துடன் மாப்பிள்ளை விருந்து வீட்டுக்கு சென்று ஐந்து கரகப்பானைகளை எடுத்து பெண் வீட்டுக்கு கொண்டு வருவார்கள். இதை இருசீர்பானை கொண்டு வருதல் என்று சொல்வார்கள்.

31. பெண் காணுதல்,

பெண் அருமைக்காரர் ஒரு பேழை மூடியில் தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, புதுச் சீலை,

மற்றும் எலுமிச்சம்பழம். தங்க மோதிரம். பணம் எல்லாம் வைத்து. மாப்பிள்ளை விருதி வீட்டிலிருந்து. பெண் அருமைக்காரர் மாப்பிள்ளையின் தாயார் மற்றும் சில பெண்கள். நாவிதன். எல்லோரும் மேளவாத்தியத்துடன் பெண் வீட்டுக்கு சென்று. பெண்ணுக்கு சேலையை கொடுத்து கட்டச் சொல்லி மடியில் தேங்காய் பழங்களை கட்டச் சொல்லி. மாப்பிள்ளையின் தாயார் மோதிரத்தை வெற்றிலையில் வைத்துக் கொடுப்பார் பெண் மாமியை நமஸ்காரம் செய்து மோதிரத்தை வாங்க வேண்டும்.

32. (பெண் மாப்பிள்ளை பிள்ளையார் கோவிலுக்கு போகுதல்)

ஒரு தட்டத்தில் தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு சந்தனம் சாம்பிராணி இவைகள் வைத்து பண்டாரம் பிள்ளையார் கோவிலுக்கு செல்வார். பிறகு மாதாரி (சக்கிலி) பெண் மாப்பிள்ளை இருவருக்கு செருப்புக் கொண்டு வந்து முன்வாசலில் முக்காலி போட்டு அதன் மேல் செருப்புகளை வைப்பான் பெண் மாப்பிள்ளை இருவரையும் கூட்டி வந்து முதலில் மாப்பிள்ளை காலில் செருப்பைத் தொடுவார். பிறகு பெண் செருப்புத் தொடுவார்

பிறகு மாதுரிக்கு இரண்டுபடி அரிசி பருப்பு சர்க்கரை 4 அணா-இவைகளை கொடுத்து அனு ப்புவார்கள். பிறகு பெண்ணும் மாப்பிள்ளையும் உறவினர்கள் பெரியவர்கள் எல்லோரையும் காலைத்தொட்டு நமஸ்காரம் செய்வார்கள் அப்போது உறவினர்கள் வெற்றிலை பாக்கில் பணம் வைத்துக் கொடுப்பார்கள். பிறகு மேள வாத்தியத்துடன் பிள்ளையார் கோவிலுக்கு சென்று வரிசையாக நிற்பார்கள் பண்டாரம் பிள்ளையாருக்கு பூஜை செய்து. முதலில் பெண் மாப்பிள்ளைக்கு விபூதி கொடுத்து விட்டு பிறகு உறவினர்கள் எல்லோருக்கும் விபூதி கொடுப்பார். பிறகு தேங்காய் பழம் பிரசாதம் தட்டத்தில் வைத்து பண்டாரம் மாப்பிள்ளையின் கையில் கொடுப்பார். மாப்பி ள்ளை வாங்கி பெண்கையில் கொடுப்பார் பிறகு தேங்காய் பழத்தை பெண்ணின் மடியில் கட்டுவார்கள். பிறகு எல்லோரும் கோவிலை விட்டு வெளியில் வந்து பெண் மாப்பிள்ளையை கிழக்கு முகமாக நிறுத்தி. தேங்காய் ஒன்று எடுத்து இருவர் இரசியும் சுற்றி கல்லில் உடைத்து விடுவார்கள், பிறகு புறப்பட்டு வீட்டுக்கு வருவார்கள்.

பிறகு எல்லோரும் மதியான விருந்து சாப்பிட்டு விட்டு இருப்பார்கள்.

93. பெண் மாப்பிள்ளை மாப்பிள்ளையின் ஊருக்கு செல்லுதல்,

பெண்ணின் பெற்றோர்கள் ஒரு புதுப் பெட்டியில் சீலை. ஜாக்கெட். பாடி. சீப்பு. கண்ணாடி. சோப்பு பவுடர். பணம் 200. அல்லது 300. அவர்கள் இஷ்டம் போல் வைத்து. நாவிதனிடம் கொடுத்து வண்டியில் வைக்கச் சொல்லி பெண் மாப்பிள்ளை பெரியவர்களை நமஸ்க்காரம் செய்து விட்டு வண்டியில் ஏறிப்புறப்படுவார்கள் அவர்களுடன் சில உறவினர்களும் செல்வார்கள் நாவிதனும் உடன் செல்வான் மாப்பிள்ளை ஊருக்கு சென்றதும் முதலில் பிள்ளையார் கோவில் இறங்குவார்கள் பண்டாரம் பிள்ளையாருக்கு பூஜை செய்து எல்லோருக்கும் விபூதி கொடுப்பார். பிறகு பெண் அருமைக்காரர். தட்டத்தில் நவதானியம் போட்டு சுண்ணாம்பு மஞ்சள் தூள் போட்டு தண்ணீர் விட்டுக் கலந்து கொண்டு வந்து வீதியில் நிற்பார்கள். பிறகு பெண் மாப்பிள்ளை. துணைமாப்பிள்ளை இணைப்பெண் ஆகிய

நான்கு பேரையும் வரிசையாக நிறுத்தி பெண் அருமைக்காரர் ஆலாத்தி எடுப்பார். நாலு பேருக்கும் மஞ்சள் தண்ணீரைத் தொட்டு பொட்டு வைத்து பிறகு தண்ணீரை கீழே ஊற்றி விட்டு பெண் மாப்பிள்ளையை வீட்டுக்கு அழைத்துச் செல்வார்கள் விருந்துபசாரம் நடக்கும்.

பிறகு பெண் வீட்டார் பெண் மாப்பிள்ளையை கூட்டிப் போக மாப்பிள்ளை ஊருக்கு வண்டியுடன் வருவார்கள். இவர்கள் வந்தவுடன் மாப்பிள்ளை வீட்டார் உபசரித்து கூடத்தில் வெற்றிலை பாக்கு வைப்பார்கள். பிறகு சமையல் ஆனதும் எல்லோரும் சாப்பிட்டு விட்டு பெண் மாப்பிள்ளையை கூட்டிக் கொண்டு பெண் ஊருக்கு வருவார்கள். இங்கு வந்ததும் வீடு வழித்து சுத்தம் செய்வார்கள்.

34, கரகத்து நெல் பொங்கல் வைத்தல்

பெண் குளித்து விட்டு கரகப்பானையில் இருக்கும் நெல்லை குத்தி அரிசி செய்து பிள்ளையார் கோவிலுக்கு சென்று பெண் தண்ணீர் கொண்டு வந்து பொங்கல் வைக்க வேண்டும். அப்போது மாப்பிள்ளை வீட்டு உறவினர்களும் வந்து சேருவார்கள். பண்டாரத்திடம்

தேங்காய் பழம் சூடம் சாம்பிராணி கொடுத்து
பூஜை செய்து எல்லோரும் சாமி கும்பிட்டு
விபூதி வாங்கிக் கொண்டு பொங்கல் சாதத்தை
எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்று
சாப்பிட்டு சந்தோசமாக இருப்பார்கள். மூன்றாவது
நாள் கொங்கு புலவர் வருவார். முக்காலிபோட்டு
பிள்ளையார் பிடித்து வைத்து. வெங்கல் வட்ட
லில் கால்படி பால் ஊற்றி பழம் இரண்டுபோட்டு
முக்காலியின் மேல்வைத்து பூஜை செய்து
புலவர் காராள குலத்தைப்பற்றி கம்பர் பாடிய
வாழியை பாடுவார். பிறகு பால் பழத்தை எடுத்
து சாப்பிடுவார் சபையில் உள்ளவர்கள் எல்
லோரும் பெண் மாப்பிள்ளையை ஆசீர்வதிப்
பார்கள். பெண் மாப்பிள்ளை ~~யை~~ மாப்பிள்ளை ஊரு
க்கு அழைத்துச் சென்று சுகமாக வாழ்
வார்கள்.

சுபம்.

இந்தச் சீர்கள் முக்கியமாக.
வேளாள குல கவுண்டர்கள்.
பண்டாரம் கொங்கு நாவிதன் ஆகியவர்
கல்யாணத்தில் செய்வார்கள்